திருமலைசமுத்திரம் ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : **B.வைஷ்ணவி அவர்கள்**

எண் : 3/2024-2025 நாள் : 08.06.2024

பொருள்	:	மனை பிரிவு அனுமதி - திருச்சிராப்பள்ளி மாவட்டம் - திருமலை சமுத்திரம் ஊராட்சி மற்றும் கிராம சர்வே எண். 97/1A1B, 1B, 2B1B, 4C2, 6C1B- ஆகியவற்றில் அமையும் "ஸ்ரீஅழகியசிங்கர்நகர்" மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கி உத்தரவிடுதல்.
	1	தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் -1994.
	2	திருச்சிராப்பள்ளி நகர்ஊரமைப்புத்துறை இணை இயக்குநர் அவர்களின் கடிதம் ROC NO. DUD0MO91/18933/2023/TCP/2024/TCP
	3	அரசாணை எண். 138, 79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் :
	4	திரு.M.மனோகர், கதவு எண்.36/62, EB காலனி, காஜாமலை, திருச்சி-23

உத்தரவு :

திருச்சிராப்பள்ளி மாவட்டம் - திருமலை சமுத்திரம் ஊராட்சி மற்றும் கிராம சர்வே எண்.97/1A1B, 1B, 2B1B, 4C2, 6C1B- ஆகியவற்றில் அமையும் "ஸ்ரீஅழகியசிங்கர்நகர்" மனைப்பிரிவிற்கு திருச்சிராப்பள்ளி நகர்ஊரமைப்புத்துறை இணை இயக்குநர் அவர்களின் கடிதம் ROC NO. DUD0MO91/18933/2023/TCP/2024/TCP நாள் : 11/03/2024 யின்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவிற்கு அரசாணையில் தெரிவித்துள்ளபடி சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிலப்பயன் மாற்றக் கட்டணம் ரூ.307926/- நாள் : 27.03.2024-ல் அரசின் தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், ஊராட்சியில் மனைகளின் கூராய்வு கட்டணம் ரூ.51000/- மற்றும் வளர்ச்சி கட்டணம் ரூ.75000 திருமலைசமுத்திரம் VB230288 என்ற தலைப்பில் நாள் : 28.03.2024 கூடுதல் தொகை ரூ.1,26,000/- ஏக்கர் 3.40 பரப்பளவிற்கு மனுதாரரால் திருமலைசமுத்திரம் ஊராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் உள்ள சாலைகள், பூங்கா, பொது இடம் ஆகியவை திருமலைசமுத்திரம் ஊராட்சிக்கு தான பத்திரம் எண்:2236 நாள்:19.03.2024ன்படி ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் வடிகால் அமைப்புகள் தெருவிளக்குகள் அனைத்தும் மனுதாரரின் சொந்த செலவிலேயே செய்யப்பட்டுள்ளது. திருமலைசமுத்திரம் ஊராட்சியில் தீர்மான எண்.

நாள் : அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே, அரசாணையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் சர்வே எண்.97/1A1B, 1B, 2B1B, 4C2, 6C1B-ல் ஆகியவற்றில் 3.40 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள "ஸ்ரீஅழகியசிங்கர்நகர்" மனைப்பிரிவில் மனைகள் 1 முதல் 75 வரையிலான அனைத்து மனைகளுக்கும் அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

B.Vaish

தலைவர்

திருமலைசமுத்திரம் ஊராட்சி

மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்

திரு.M.மனோகர்,

எண்.36/62, EB காலனி,

காஜாமலை,

திருச்சி-23